**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, ALANGUDI**
**Deposition of witness**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**CC No. 15/2025**

**Deposition of witness for PW.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | உம்மு சலாமா | **வயது** | : | 30 |
| **கணவர் பெயர்** | : | அப்துல் ரகுமான் | **தாலுகா** | : | அறந்தாங்கி |
| **கிராமம்** | : | முஸ்லீம் தெரு | **தொழில்** | : | வீட்டுக்குடித்தனம் |

Solemnly affirmed by Selvi.B.Sendhurdevi, Examiner of this court in accordance with the provisions of Act X of 1873.
**(A1 to A7 Absent, Petition filed and allowed. Counsel Present)**
**(Date: 24.02.2026)**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aadhaar Card of Witness verified.**

**சாட்சியானர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல்விசாரணை:**

**1.** நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தாலுகா, முஸ்லீம் தெருவில் குடியிருந்து வந்து வீட்டு குடித்தனம் நடத்தி வருகிறேன். எதிரிகள் அனைவரும் ஜமாத்தார்கள் ஆவார்கள். நான் சமூக நலத்திற்காக எங்கள் பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகள் சம்பந்தமாகவும், குழந்தை திருமணங்கள் சம்மந்தமாகவும் புகார் மனுக்கள் அளித்து பொதுசேவையில் ஈடுப்பட்டு வருகிறேன். எதிரிகள் ஆக்கிரமிப்பு மற்றும் குழந்தை திருமணம் ஆகியவற்றில் ஈடுபட்டிருந்ததால் நான் அவர்களுக்கு எதிராக புகார் மனுக்களை காவல்நிலையத்தில் அளிப்பதற்காக கடந்த 13.03.2024 அன்று சென்றிருந்தேன். அப்போது எதிரிகள் அங்கு வந்து என்னிடம் தகராறு செய்தார்கள். இதில் எதிரி ஆசிக் அகமது என்னை பார்த்து நீ எப்படி ஊருக்கு வருகிறாய் என பார்த்து கொள்கிறேன். உன்னை அடித்தால் யார் கேட்கபோகிறார்கள் என்று என்னை மிரட்டினார். 1ஆம் எதிரி முகமது இசாக் ஜமாத் தலைவர் ஆவார். அவர் ஏற்கனவே நிலுவையில் உள்ள குற்ற எண்.126/2023 என்ற வழக்கில் உன்னை விட்டு வைத்தது தவறு, உன்னை கொன்றிருக்க வேண்டும் என 1ஆம் எதிரி என்னை பார்த்து கூறினார். எதிரிகள் ரிபானா பர்வீன், தில்சத்பேகம் ஆகியோர் என்னை பார்த்து தேவடியா என்று ஆபாச வார்த்தைகள் பேசினார்கள். எதிரிகள் அப்துல் ரவுப் மற்றும் முகமது ரபிக் ஆகியோர் உன்னை கொல்லாமல்விடமாட்டோம் என சொல்லி என்னை தாக்க

முயற்சித்தபோது போலிசார் என்னை காப்பாற்றினார்கள். எதிரிகள் முஸ்லிக்கான், முகமது இசாக் அங்கு தகராறு செய்ததால் என்னை காவல்நிலையத்திலிருந்து வெளியே வர விடவில்லை. மாலை 4.00 மணியளவில் நான் காவல்நிலையத்திலிருந்து வெளியே வந்தேன். பிறகு மறுநாள் 14.03.2024 அன்று நான் மீண்டும் காவல்நிலையத்திற்கு சென்று புகார் அளித்தேன். அதற்கு மனு ரசீது அளித்தார்கள். பிறகு 16.04.2024 அன்று நான் புதுக்கோட்டை காவல்கண்காணிப்பாளர் அவர்களுக்கு புகார் மனு அளித்திருந்தேன். அதன்பிறகு அந்த மனுவின் அடிப்படையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததால் நான் நீதிமன்றத்தில் மனு செய்து அதன் அடிப்படையில் இந்த வழக்கு பதியப்பட்டது. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

இல்லை.

**<u>மறுவிசாரணை:</u> இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சி அதை படித்துப் பார்த்து சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு அவரால் கையொப்பமிடப்பட்டது.

(ஒம்/-எஸ்.சக்திநாராயணமூர்த்தி)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
ஆலங்குடி.